DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 99/2025**

**Deposition of LW2 examined as PW1** (Eyewitness) Dt. 06.04.2026

| | |
|---|---|
| Name | மோகன் |
| Father's/Husband's Name | தங்கவேல் |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | சீர்காழி |
| Age | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 06.04.2026

*(A1 to A3 absent. U/s. 355 of BNSS petition filed and allowed)*

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நான் எருமல் ஊரில் உள்ள வயலுக்கு சென்றிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் எதிரிகள் எனது தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். புகார்தாரர் பிரசாத் எனது தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார். புகார்தாரர் குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் ஏற்கனவே சொத்து பிரச்சனை இருந்து வந்தது. இரு தரப்பினர் வயல் அருகருகே உள்ளது. இந்நிலையில் கடந்த 14.07.2024 அன்று காலை 9.00 மணியளவில் நானும் எனது தெருவை சேர்ந்த கருணாநிதி என்பவரும் வயலுக்கு சென்ற போது பிரசாத்குமார் நெல்வயலில் ரவி வீட்டு கோழிகள் மேய்ந்து கொண்டிருந்தது. இது பற்றி பிரசாத்குமார் அருகில் உள்ள வயலில் நின்று கொண்டிருந்த ரவி மற்றும் அவருடைய குடும்பத்தாரை பார்த்து உங்க கோழிகள் எனது வயலை மேய்ந்து சேதப்படுத்துகிறது என்று கேட்டதற்கு ரவியும் அவருடைய மகன் சிவரஞ்சன், ரவியின் மனைவி சுசிலா

T. Mohan

6/4/26

ஆகியோர்கள் பிரசாத்குமாரை பார்த்து குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே எங்க வீட்டுக்கோழி அப்படிதான் மேயும் உன்னால என்ன செய்ய முடியும் என திட்டி, ரவி கீழே கிடந்த கழியை எடுத்து பிரசாத்குமாரை தலையில் அடித்ததாகவும், சிவரஞ்சன் மற்றொரு கழியால் பிரசாத்குமாரின் வலது முண்டாளில் அடித்ததாகும் அதில் அவருக்கு தலை மற்றும் வலதுகையில் காயம் ஏற்பட்டதாகவும், சுசிலா கையால் பிரசாத்குமாரை முதுகில் அடித்ததாகவும், ரவி மற்றும் சிவரஞ்சன் இருவரும் பிரசாத்குமாரை பார்த்து இனிமேல் இங்கு வந்தால் கொன்றுவிடுவோம் என கழியை காட்டி மிரட்டியதாகவும், பிறகு பிரசாத்குமாரின் தம்பி செல்வகுமார், பிரசாத்குமாரை சீர்காழி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரிகள் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

T. Tolan

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

m. Rajeswari 6/4/26

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை